Living, breathing streets

வாழ்வதற்கு மற்றும் சுவாசிப்பதற்கு உகந்த சாலைகள்



CAG
Citizen consumer and civic Action Group
Living, breathing streets
Printed in 2022
Illustrated by Karna
Citizen consumer and civic Action Group (CAG)
No.103 (First Floor), Eldams Road, Teynampet, Chennai 600 018.
www.cag.org.in | T: +91(44) 2435 4458 | 2435 0387
Email: helpdesk@cag.org.in
Copyright: All content in this booklet is the property of CAG and
licensed for use under the CC-BY-NC-SA 4.0.

Does this seem familiar? Is your neighbourhood as chaotic?

இது உங்களுக்கு பழக்கப்பட்ட இடம் போல் தெரிகிறதா? உங்களது பகுதியும் இப்படித்தான் குழப்பம் நிறைந்து காணப்படுகிறதா?

Does walking through the streets of Chennai feel like a chore? Do the poor roads, terrible traffic, congestion, and pollution put you off? Would you rather just drive your car or bike?

This is what we all choose to do; which explains the congestion, pollution and the accidents on our roads. We live in cities that prioritise motorised traffic by widening roads, building flyovers, etc. Pedestrians and cyclists have no space on the roads. Eventually, they choose motorised modes to get around also. And then we have more congestion, more pollution and more accidents.

It doesn't have to be like this!

சென்னையின் சாலைகளில் நடப்பதே ஒரு பெரிய சாதனையாக தெரிகிறதா? அதன் மோசமான சாலைகள், மோசமான போக்குவரத்து நெரிசல் மற்றும் மாசு பிரச்சனைகள் உங்களது மனநலத்தை பாதிக்கிறதா? நீங்கள் உங்கள் கார் அல்லது பைக்கில் செல்வதைத் தவிர வேறு எதையும் சிந்திப்பதில்லையா?

நம்மில் பெரும்பாலானவர்கள் இதைத்தான் செய்கிறோம்; சாலைகளில் உள்ள இவ்வளவு நெரிசல், மாசு மற்றும் விபத்துக்கள் அனைத்துக்கும் இந்த மனநிலையே ஒரு காரணமாக அமைந்து விடுகிறது. மோட்டார் வாகனப் போக்குவரத்துக்காக சாலைகளை விரிவுபடுத்துதல், மேம்பாலங்கள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் நகரங்களில் நாம் வாழ்கிறோம். பாதசாரிகளுக்கும் சைக்கிளில் செல்பவர்களுக்கும் இந்த சாலைகளில் இடமே இருப்பதில்லை. கடைசியாக அவர்களும் தங்கள் பயணத்திற்கு மோட்டார் வாகனங்களைத்தான் தேர்வு செய்கின்றனர். அதன் விளைவாக நமது சாலைகளில் நெரிசல் இன்னும் அதிகமாகிறது, மாசு அதிகமாகிறது அத்துடன் விபத்துக்களும் அதிகரிக்கின்றன.

ஆனால் இந்த சூழ்நிலை இப்படி இருக்க வேண்டிய அவசியம் இல்லை!

Clean air is easy!



Private vehicles contributes 89% of emissions from the transport sector in Chennai.

Source: urbanemissions.info (2012)

Chennai's particulate matter is three to five times more than WHO limits. This has, in 2020, led to 11,000 premature deaths.

Source: Greenpeace International 2022

Chennai's air is unsafe to breathe!

சுத்தமான காற்றைப் பெறுவது சுலபம்தான்!

சென்னையில் போக்குவரத்துத் துறையினால் வெளியிடப்படும் புகையில் 89% தனியார் வாகனங்களில் இருந்து வருபவை ஆகும்.

ஆதாரம்: urbanemissions.info (2012)

சென்னையின் காற்றில் கலந்துள்ள துகள்களின் மாசு உலக சுகாதார நிறுவனம் (WHO) பரிந்துரைக்கும் வரம்பைக் காட்டிலும் மூன்று முதல் ஐந்து மடங்குகள் அதிகமாக உள்ளது. இதுவே 2020இல் ஏறக்குறைய 11,000 அகால மரணங்களுக்கு காரணமாக அமைந்துள்ளது.

ஆதாரம்: கிரீன்பீஸ் இன்டர்நேஷனல் 2022

சென்னையின் காற்று சுவாசிப்பதற்கு பாதுகாப்பற்றதாக உள்ளது!

Air

Governments must prioritise cycling, walking, public transport by creating:

- Wider, safer pavements for all
- Frequent pedestrian crossings
- Dedicated cycle lanes
- Interlinked, seamless travel between bus, train
- Easy travel to and from bus stops/stations
- Better frequency, service quality, coverage of city by bus/train

This can clear the congestion on our roads.
And we can breathe clean air again!

அரசாங்கங்கள் பின்வரும் செயல்களின் மூலமாக சைக்கிள் பயன்படுத்துதல் மற்றும் நடந்து செல்வதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்:

- அகலமான, பாதுகாப்பான சாலையோர நடைபாதைகள்
- பாதசாரிகள் சாலைகளைக் கடப்பதற்கான அதிக பாதைகளை உருவாக்குதல்
- பிரத்யேகமான சைக்கிள் வழித்தடங்களை உருவாக்குதல்

பொதுப் போக்குவரத்து (பேருந்துகள் மற்றும் இரயில்கள்) சேவைகளும் அடிக்கடி இருக்கும்படியாகவும், சரியான நேரத்தில் வரும் வகையிலும், அத்துடன் நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் சேவை வழங்கும் விதத்திலும் அவற்றின் சேவைகள் மேம்படுத்தப்பட வேண்டும். இது நமது சாலைகளில் ஏற்படக்கூடிய நெரிசலைக் குறைக்கும். அப்போது நாமும் சுத்தமான காற்றை சுவாசிக்க முடியும்!

காற்று

Green spaces are essential!

Trees are the lungs of the city

They play a major role in absorbing carbon dioxide and providing shade. Lack of green cover and increase in concrete surfaces leads to higher temperatures. This is called urban heat island effect. No wonder our summers are feeling hotter!

We can help Chennai cool down by planning green spaces and planting more trees around us. Trees are great for mental health! They create calm spaces for physical activity.



Isn't the canopy of a tree nice to cool off under?

பசுமைப் பகுதிகள் மிகவும் அவசியமானவை!

மரங்கள் தான் நகரத்தின் நுரையீரல்.

அவை கார்பன்-டை-ஆக்ஸைடை கிரகித்துக் கொள்வதிலும் நிழல் தருவதிலும் முக்கியப் பங்காற்றுகின்றன. பசுமையான பகுதிகள் ஏதுமின்றி நிலப்பரப்பு அனைத்தும் கட்டிடங்களாக மாறும்போது, வெப்பநிலை அதிகரிக்கிறது. இதற்கு நகர்ப்புற வெப்பத் தீவு பாதிப்பு என்று பெயர். கோடைக் காலங்களில் அதிக வெப்பம் தகிப்பதற்கு இப்போது காரணம் புரிந்திருக்குமே!

நாம் பசுமைப் பகுதிகளைத் திட்டமிடுவதன் மூலமாகவும் நம்மைச் சுற்றி அதிகமான மரங்களை வளர்ப்பதன் மூலமாகவும் சென்னையின் வெப்பத்தை குறைக்க முடியும். மரங்கள் மனநல ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தவையாகும்! அவை உடற் செயல்பாட்டிற்கு தேவையான அமைதியான இடங்களை வழங்குகின்றன.

ஒரு நிழல்தரும் மரத்தின் கீழ் நிற்பது நமக்கு நன்றாக இருக்கிறது அல்லவா?

Social spaces are enjoyable!

Chennai's streets are chaotic and unsafe. There are no provisions for social interaction. Much of our time on roads is spent cocooned inside a car or zipping by on a bike. Good street design should provide spaces to socialise, meet new people and make new friends.

We need streets designed for people, not machines. We need:

Benches

Trees

Parks

Drinking water

Toilets

Walking, shopping or even waiting for the bus can all be opportunities to meet new people and make new friends.

சமூகத் தொடர்புகளுக்கான இடம் மகிழ்ச்சியினை அளிக்கும்!

சென்னையின் சாலைகள் குழப்பம் நிறைந்ததாகவும் பாதுகாப்பற்றதாகவும் உள்ளது. இங்கு சமூக தொடர்புகளுக்கு எந்த வாய்ப்பும் இருப்பதில்லை. சாலையில் நாம் செலவிடும் பெரும்பாலான நேரங்கள் ஒரு காருக்குள் ஒண்டிக்கொள்கிறோம் அல்லது ஒரு பைக்கில் பறக்கிறோம். நல்ல சாலை வடிவமைப்பு என்பது சமூகத் தொடர்புகளுக்கும், புதிய மக்களைச் சந்திக்கவும் புதிய நண்பர்களை உருவாக்கவும் வாய்ப்பளிப்பதாக இருக்க வேண்டும். நமக்கு தேவை மக்களுக்காக வடிவமைக்கப்பட்ட சாலைகள்தான், இயந்திரங்களுக்காக வடிவமைக்கப்பட்ட சாலைகள் அல்ல.

நமக்கு தேவையானவை:

- மேஜைகள்
- மரங்கள்
- பூங்காக்கள்
- குடி தண்ணீர்
- கழிப்பறைகள்

நடப்பது, ஷாப்பிங் செய்வது அல்லது பேருந்திற்காக காத்திருப்பது கூட புதிய நபர்களைச் சந்திக்க ஒரு வாய்ப்பாக அமையலாமே.



Safety

Streets should be safe!

Did you know that 17 people are killed on Indian roads every hour!

Source: Road Accidents in India 2019, MoRTH

Increasing number of private transport vehicles, poor driving skills, lack of respect for other road users together with poor street/road design are all responsible for these shocking numbers.

Pedestrians (especially women, children and the elderly) also battle other dangers on our streets. Do you feel safe letting your child walk alone? Are your roads well lit? And do *you* feel safe walking alone?

சாலைகள் பாதுகாப்பானதாக இருக்க வேண்டும்!

ஒவ்வொரு மணிநேரமும் இந்திய சாலைகளில் 17 மக்கள் கொல்லப்படுகின்றனர் என்று உங்களுக்குத் தெரியுமா!

ஆதாரம்: இந்தியாவில் சாலை விபத்துக்கள் 2019, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் (MoRTH)

அதிகரித்து வரும் தனியார் வாகனங்களின் எண்ணிக்கை, மோசமான வாகன ஓட்டும் திறன்கள், சாலையைப் பயன்படுத்தும் மற்றவர்கள் மீது அக்கறையின்மை போன்றவற்றுடன் மோசமான சாலை வடிவமைப்பு ஆகிய இந்த அனைத்தும்தான் இத்தகைய அதிர்ச்சி தரும் மரணங்களுக்கான காரணமாகும். பாதசாரிகள் (முக்கியமாக பெண்கள், குழந்தைகள் மற்றும் வயதானவர்கள்) இது மட்டுமின்றி இன்னும் பல்வேறு அபாயங்களை எதிர்கொள்கின்றனர். உங்கள் குழந்தை சாலையில் தனியாக நடந்து செல்வதை நீங்கள் பாதுகாப்பாக உணர்வீர்களா? நமது சாலைகளில் நல்ல வெளிச்சம் தரும் வகையில் சாலை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதா? நீங்கள் தனியாக நடந்து செல்வதைப் பாதுகாப்பாக உணர்வீர்களா?

We need fewer private vehicles on our roads, more public transport opportunities and better enforcement.

As citizens, we need to know and obey traffic rules at all times, and respect other road users - even those ones that we view as slow (pedestrians and cyclists).

A well-lit street busy with pedestrians, vendors and cyclists is safer than a road with only cars driving by.

Wouldn't it be nice to have zero deaths on our roads?

Wouldn't it be nice to walk without fear, day or night?

நமது சாலைகளில் தனியார் வாகனங்களின் எண்ணிக்கை குறைவாக இருக்க வேண்டும், அதிக பொதுப் போக்குவரத்துக்கான வாய்ப்புகள் இருக்க வேண்டும் அத்துடன் அது சம்மந்தமான திட்டங்கள் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட வேண்டும்.

குடிமக்கள் என்ற முறையில், நாம் அனைவரும் சாலைப் போக்குவரத்து விதிகளை நன்கு அறிந்திருப்பதுடன் அவற்றை மதித்து நடக்க வேண்டும், மற்ற சாலைப் பயன்பாட்டாளர்களை மதித்து நடக்க வேண்டும் – மிகவும் மெதுவாக செல்கிறார்கள் (பாதசாரிகள் மற்றும் சைக்கிளில் செல்வோர்) என்று நாம் கருதுபவர்களைக் கூட மதித்து நடக்க வேண்டும்.

பாதசாரிகள், விற்பனையாளர்கள் மற்றும் சைக்கிள் ஓட்டுபவர்கள் நிறைந்த நல்ல வெளிச்சமுள்ள சாலை, கார்கள் மட்டுமே செல்லும் சாலையை விட பாதுகாப்பானது.

சாலையில் ஒரு மரணம் கூட நிகழவில்லை என்றால் நன்றாக இருக்கும் அல்லவா?

பகலோ இரவோ எப்போதும் சாலையில் பயமின்றி நடக்க முடிந்தால் நன்றாக இருக்கும் அல்லவா?

Streets for all!

Street design should accommodate the needs of the disabled, the elderly and children. Our streets are impossible to use, given the chaotic traffic, uneven pavements, encroachments by vehicles and shops. When even the young and fit struggle under these circumstances, imagine the plight of the disabled or the elderly!

சாலைகள் அனைவருக்குமானவை!

சாலையை வடிவமைக்கும்போது மாற்றுத் திறனாளிகள், வயதானவர்கள் மற்றும் குழந்தைகள் என அனைவரின் தேவைகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். தற்போதுள்ள குழப்பமான போக்குவரத்து நெரிசல், சீரற்ற நடை பாதைகள், வாகனங்கள் மற்றும் கடைகள் இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளுதல் போன்ற காரணங்களால் நமது சாலைகள் பயன்படுத்த தகுதியற்றவையாக உள்ளன. இளைஞர்களும் உடல் ஆரோக்கிய நிலையில் உள்ளவர்கள் கூட இந்த சாலைகளில் கஷ்டப்படும் சூழ்நிலையில், மாற்றுத் திறனாளிகள் அல்லது வயதானவர்களின் நிலையைக் கேட்கவே வேண்டாம்!

These can make our streets universally accessible:

- Wide, even pavements with ramps for wheelchair users.
- Disabled friendly infrastructure like tactile tiles.
- Safe pedestrian crossing with median refuge
- Accurate, dependable signage on roads/streets

Imagine needing a friend's help to even just cross the road!

Independently navigating a road is everyone's right.

பின்வருவன நமது சாலைகளை அனைவரும் பயன்படுத்தக் கூடியதாக மாற்றும்:

- சக்கர நாற்காலியைப் பயன்படுத்துபவர்களுக்கான சரிவுகளுடன்கூடிய அகலமான, சீரான நடைபாதைகள்.
- மாற்றுத் திறனாளிகளும் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் சிறப்பு அமைப்புகளைக் கொண்ட டைல்கள் (டாக்டைல் டைல்கள்) பொருத்தப்பட்ட நடைபாதைகள்
- சாலைத் தடுப்பின்றி அமைக்கப்பட்ட பாதுகாப்பான பாதசாரிகள் சாலையைக் கடக்கும் அமைப்பு
- சாலைகளில் துல்லியமான, நம்பகமான அடையாளக் குறியீடுகள்

சாலையைக் கடப்பதற்குக் கூட நண்பரின் உதவி தேவை என்று கற்பனை செய்து பாருங்கள்!

சுதந்திரமாக சாலையில் செல்வது அனைவரின் உரிமை.



Public transport can make things better for EVERYONE!

Everyone has a right to safe, affordable transport whether they are studying, working, or socialising. If we want our streets to be safe, clean, accident-free, less congested, we need to start using public transport.

Sadly, public transport (buses, trains, share autos, etc) has been neglected; this has forced many of us to prefer private transport.

We can improve our public transport by:

1. Increasing fleet size and frequency of services
2. Making it affordable and accessible for all
3. Making it easy to use public transport - good information, connectivity between buses and trains, improved safety
4. Using green energy sources.

We need to redesign our streets in such a way that it prioritises public transport, pedestrians and cyclists over private vehicles.

Good public transport can make all our lives better.

பொதுப் போக்குவரத்துப் பயன்பாடு அனைவருக்கும் சூழ்நிலையை மேம்படுத்தும்

படிக்கிறவர்கள், வேலை செய்பவர்கள் அல்லது சாதாரணமாக வெளியே செல்பவர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் நியாயமான விலையில் பாதுகாப்பான போக்குவரத்து சேவைகளைப் பெற உரிமை உள்ளது. நமது சாலைகள் பாதுகாப்பானதாக, சுத்தமானதாக, விபத்தில்லாததாக, நெரிசல் அற்றதாக இருக்க வேண்டும் என்று நாம் விரும்பினால், பொதுப் போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்த ஆரம்பிக்க வேண்டும்.

பொதுப் போக்குவரத்து (பேருந்துகள், இரயில்கள், ஷேர் ஆட்டோக்கள் போன்றவை) சேவைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பது வருத்தமான யதார்த்த நிலையாகும்; இது நம்மில் பலரை தனியார் போக்குவரத்தை விரும்பும் நிலைக்கு தள்ளியுள்ளது. நாம் இவற்றின் மூலமாக நமது பொதுப் போக்குவரத்து சேவையை மேம்படுத்தலாம்:

1. வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவை வழங்கும் பயணச் சேவைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
2. விலை குறைவாக வழங்குதல்
3. பொதுப் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்துவதை எளிதாக்குதல் – சிறந்த தகவல், பேருந்துகள் மற்றும் இரயில்களுக்கு இடையேயானஇணைப்பு, பாதுகாப்பை மேம்படுத்துதல்
4. பசுமை மின்சார ஆதாரங்களைப் பயன்படுத்துதல்.

பொதுப் போக்குவரத்து, பாதசாரிகள் மற்றும் சைக்கிளில் செல்வோரின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் நமது சாலைகளை மறுவடிவமைப்பு செய்ய வேண்டும்.

நல்ல பொதுப் போக்குவரத்து நம் அனைவரின் வாழ்க்கையையும் சிறப்பாக மாற்றும்.



We started off wanting to re-imagine our city.

Sustainable mobility is one way to do it.

It’s a way of commuting that is safe, equitable, cohesive, while also keeping our impact on earth low. Walking, cycling and public transport are the more sustainable modes of transport available.

நாம் நமது நகரத்தினை மறு-கற்பனை செய்யத் துவங்கியுள்ளோம்.

நிலையான போக்குவரத்து இயக்கம் என்பது அதைச் செய்வதற்கான ஒரு வழியாகும்.

இது பாதுகாப்பானதாக, சமமானதாக, ஒருங்கிணைக்கப் பட்டதாக இருக்கும், அதேவேளை பூமியின் மீது நமது தாக்கத்தையும் குறைவாக வைத்திருக்கும். நடத்தல், சைக்கிளில் செல்லுதல் மற்றும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துதல் ஆகியவை நமக்கு இருக்கக்கூடிய நிலையான போக்குவரத்து முறைகளாகும்.



There is now a global shift to sustainable mobility; and Chennai can lead the way!

நிலையான போக்குவரத்து இயக்கத்தினை நோக்கி உலகம் வேகமாக மாறி வருகிறது; சென்னை அதற்கான முன்னோடி நகரமாக திகழலாம்!

Sustainable mobility is recognised globally as an important contribution to reducing our carbon footprint. The United Nations, in its Sustainable Development Goals (SDGs) recognises liveable, sustainable cities as crucial and that sustainable mobility is an essential part of achieving this.

நிலையான போக்குவரத்து முறை என்பது நமது கார்பன் வெளியீட்டு பாதிப்புகளைக் குறைப்பதற்கான ஒரு முக்கிய பங்களிப்பாக இருக்கும் என்று உலக அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை அதன் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் (SDGs) வாழ்வதற்கு தகுதியான, நிலைத்த தன்மை கொண்ட நகரங்கள் மிகவும் முக்கியமானவை என்பதையும், இதை அடைவதற்கு நிலையான போக்குவரத்து முறை என்பது முக்கியமென்பதையும் அங்கீகரித்துள்ளது.

Plan of Action - Government

செயல்திட்டம் - அரசாங்கம்

- Provide a complete NMT friendly streets with cycle tracks, wide footpaths
- Promote sustainable modes of transport
- Disincentivize private transport

Have you heard about the ‘car-free Sunday’ in Chennai?

It is one of the initiatives taken by Greater Chennai Corporation (GCC) to promote a healthier lifestyle and equitable street design.

- சைக்கிள் வழித்தடங்கள் மற்றும் அகலமான நடைபாதைகள் என முற்றிலும் மோட்டார் வாகனம் செல்லாத சாலைகளை வழங்குதல்
- நிலையான போக்குவரத்து முறைகளை ஊக்குவித்தல்
- தனியார் போக்குவரத்து முறைகளுக்கு அளிக்கப்படும் ஊக்கத்தைக் விலக்குதல்

சென்னையில் ‘கார் இல்லாத ஞாயிற்றுக் கிழமை’ என்பதைக் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா?

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதற்காகவும் சரிசமமான சாலைப் பயன்பாட்டு வடிவமைப்பை ஏற்படுத்துவதற்காகவும் பெருநகர சென்னை மாநகராட்சி (GCC) மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.



Plan of Action - Citizens

செயல்திட்டம் - குடிமக்கள்

Community-led efforts are powerful drivers of change.

Citizen Responsibility:

- Follow rules and regulations laid down
- Maintain public infrastructure

Choose sustainable modes of transportation. Try to walk or cycle for short trips. As much as possible, opt for public transport instead of private vehicles.

Let us work together to create a sustainable Chennai.

மக்கள் முன்னின்று செயல்படுத்தும் முயற்சிகள் யாவும் மாற்றத்தின் சக்திவாய்ந்த இயக்கிகள்.

குடிமக்களின் பொறுப்பு:

- அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் பின்பற்றி நடத்தல்
- பொது அடிப்படை வசதிகளைபராமரித்தல்
- நிலையான போக்குவரத்து முறைகளைத் தேர்வு செய்தல். சிறிய தூரப் பயணங்களுக்கு நடந்து செல்லுதல் அல்லது சைக்கிளைப் பயன்படுத்துதல். முடிந்தவரை தனியார் வாகனங்களுக்கு பதிலாக பொதுப் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்துதல்.

நிலையான சென்னையை உருவாக்க ஒன்றிணைவோம்

Where would you rather live?

இப்படி வாழ விரும்புகின்றோம்



Citizen consumer and civic Action Group (CAG)
No.103 (First Floor), Eldams Road, Teynampet, Chennai 600 018.
www.cag.org.in | T: +91(44) 2435 4458 | 2435 0387
Email helpdesk@cag.org.in
Copyright: All content in this booklet is the property of CAG and licensed for use under the CC-BY-NC-SA 4.0.


HOSPITAL
TEA STALL
20
BUS STOP